சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பாக தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே. கர்ணாகரன் தலைமையில் நல்லூர் ஊராட்சி, சோலையம்மன் நகரில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல.ஏ. பொதுமக்களின் பயன்பாட்டிற்க்கு நீர் – மோர் பந்தலை திறந்து வைத்து தர்பூசனி, வெள்ளரிக்காய் உள்ளிட்ட பழங்கள் வழங்கினார். உடன் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கே.வீரம்மாள், சே.அரசு, நா.பரசுராமன், சரவணன். செல்வகுமார், இரத்தினமாலா, சிவகாமி, பாலாஜி, முருகேசன், பா.சேகர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சோலையம்மன் நகர் கிளை செயலாளர் கோ.செந்தில்குமார் சிறப்பாக ஏற்பாடு செய்தருந்தார்.

குன்றத்தூரில்

முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

காஞ்சிபுரம், ஏப்.3- குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் திருமுடிவாக்கம் ஊராட்சி தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் - திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் களின் 72பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம். ஒன்றிய கழக செயலாளர் படப்பை. ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் கந்திலி கரிகாலன், முரசொலி மூர்த்தி, சரஸ்வதி மனோகரன், ஏ.வந்தே மாதரம், உமாமகேஸ்வரி ஏ.மணி, லட்சாவதி கருணாகரன், ப.வைத்திய லிங்கம், மு. சுப்பிரமணி, வ. நந்த கோபால், வாசுகிமகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மூ. ராஜேந்திரன், மா. பரிமேலழகன், மூ. குமார், பொன்.ரமேஷ்கவி, எஸ். கர்ணன், ப.அறிவொளி, அ.ஜமீர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் அபினேஷ் பாபு தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 772 இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா வன்னியம்பதி எஸ்.சி.பி. காலனி ஆர்.ஏ.புரம், சென்னை–28 – இல் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தூத்துக்குடி எஸ்.ஜோயல், கோ.வி.லெனின், மந்தைவெளி அ.பாபு, பா.ஸ்ரீலேகா ஆகியோர் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர். பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி முன்னிலை வகித்தனர். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெய்வேலி – திருவாரூர் ஊராட்சி சமத்துவபுரத்தில்

600 மீட்டர் தூரத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்திடுக!

சட்டப் பேரவையில் சபா.இராஜேந்திரன் கேள்வி!

சென்னை,ஏப்.3-

சட்டப் பேரவையில் நெய்வேலி தொகுதி உறுப்பினர் சபா.இராஜேந்திரன் கேள்வி நேரத்தின் போது திருவாரூர் ஊராட்சி சமத்துப்புரத்தில் 600 மீட்டர் தூரத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து விவாதம் வருமாறு:

சபா. இராசேந்திரன்: நெய்வேலி தொகுதி, திருவாமூர் ஊராட்சிக்குட்பட்ட சமத்துவபுரத்தில் 600 மீட்டர் தூரத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

அமைச்சர் துரைமுருகன்: காமாட்சிபேட்டை கிராமம், கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து, கரைகளைப் பலப்படுத்தி, வெள்ளத்தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூ.37 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்று இந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் அவர்கள் கேட்கும் தடுப்புச் சுவர் பணியும் இதில் அடக்கம். விரைவில், நிர்வாக ஒப்புதல் அளித்து பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சபா. இராசேந்திரன்: காமாட்சிபேட்டை தடுப்பணையோடு சேர்த்து திருவாமூரிலும் தடுப்புச் சுவர் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஃபெஞ்சல் புயலின்போது இந்தப் பகுதியில் முழுவதுமாக வெள்ளநீர் புகுந்துவிட்டது. அந்த நேரத்தில் ஃபெஞ்சல் புயலின் பாதிப்பின்போது, கடலூர் மாவட்டத்திற்கு 2 தினம் இடைவெளியில் 2 முறை பார்வையிட்டு, ஆய்வு செய்த துணை முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வு செய்த துணை முதலமைச்சர் அவர்கள் பணிகளை முடுக்கி விட்டு, நிதிகளை ஒதுக்கி தந்தார்கள். அந்த அடிப்படையில், நிதி ஒதுக்கித் தந்திருக்கிற நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவாமூரின் அடுத்து பகுதியில் மலட்டாற்றின் வழியாக வெள்ள நீர் புகாமல் இருப்பதற்கு ஒரு 500 மீட்டர் தடுப்புச் சுவர் கட்டித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

அமைச்சர் துரைமுருகன்: கடந்தாண்டு ஃபெஞ்சல் புயலின்போது ஏற்பட்ட வெள்ளம் கெடிலம் ஆற்றின் இடக்கரை வழியாக சமத்துவபுரத்தைச் சூழ்ந்தது. எனவே, அதைத் தடுக்க 600 மீட்டர் தூரத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்க சுமார் 90 இலட்சம் ரூபாய் ஆகும் என்று முன்னர் மதிப்பிடப்பட்டது. இந்த நிலையில், இந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, கெடிலம் ஆற்றின் குறுக்கே ரூ.37 கோடி மதிப்பீட்டில் காமாட்சிபேட்டை இடத்தில் தடுப்பணை ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பணை அமையும் காமாட்சிபேட்டை என்ற இடத்திலிருந்து திருவாமூர் ஊராட்சியில் உள்ள கெடிலம் ஆற்றின் கரைகள் 600 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்தக் கரையை பலப்படுத்தும் பணி இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. விரைவில், நிர்வாகம் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

சபா. இராசேந்திரன்: அதேபோல், நெய்வேலி தொகுதிக்குட்பட்ட விசூர் வெள்ளவாரி ஓடையில் மழைக் காலங்களில் வெள்ள நீர் விளை நிலங்களில் புகாமல் இருக்கவும், கீழிருப்பு ஓடையில் உள்ள தடுப்பணையைச் சீரமைக்கவும் அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி, பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் துரைமுருகன்: உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு முன்னுரிமைக் கொடுத்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

நா.மோகன் தலைமை! துறைமுகம் மேற்கு பகுதி

இளைஞரணி சார்பில் தாகம் தீர்க்கும் நீர்-மோர் பந்தல்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைக்கிறார்!

சென்னை,ஏப்.3- சென்னை கிழக்கு மாவட்ட துறைமுகம் மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் - கோடை வெப்பத்திலிருந்து மக்களைக் காக்கும் வகையில் தண்ணீர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி இன்று (3.4.2025 வியாழக்கிழமை) காலை 7.30 மணி அளவில் மின்ட் தெரு மகாசக்தி ஓட்டல் அருகில் துறைமுகம் மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் நா. மோகன் தலைமையில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு நீர் - மோர் பந்தலை திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியை எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு எம்.சி., ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் ராஜேஷ் ஜெயின் எம்.சி., வட்டச் செயலாளர் பா.அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ், கே.ஆர். அப்ரஞ்சி, டி.எஸ் சேகர், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அ.திருப்பதி. அ.ஆனந்த், எம்.சண்முகசுந்தரம், பா.அஜித்குமார், கே.ஆர். மணிரத்தினம், எம். கன்னியப்பன், எஸ்.ராஜ ஆ, எம்.உதயா, முருகன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 572 பொதுமக்களுக்கு சென்னை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தண்டையார்பேட்டை நேதாஜி நகரில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் விமலா மோகன் ஏற்பாட்டில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் கலந்து கொண்டு நலஉதவிகள் வழங்கினர்.நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் கழக இளம் பேச்சாளர்கள் க. பார்கவி, ஜோதி, ஏ.எஸ். விஜயகுமாரி, டாக்டர் யாழினி, வட்டச் செயலாளர்கள் எஸ்.எல். சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம். சசிகுமார், ஜி.ஏழுமலை, எம்.ஆர். பி.ராஜன், மற்றும் அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் அறிவித்த

708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் பயன்பாட்டிற்கு வந்துள்ளவை எத்தனை?

சட்டப் பேரவையில் – ப.தாயகம் கவி கேள்வி!

சென்னை,ஏப்.3- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது திரு.வி.க.நகர் தொகுதி உறுப்பினர் தாயகம் கவி கேட்ட கேள்வியும், அதற்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:

ப.தாயகம் கவி: முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தார். அவற்றில் எத்தனை நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றன?

அமைச்சர் மா. சுப்பிரமணியன்: முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று இதே மன்றத்தில் விதி 110-ன்கீழ் 2022 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் தேதி அறிவிப்பு செய்தார்கள். அவ்வாறு அறிவிக்கப்பட்ட ஒரே ஆண்டில், அதாவது 2023 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 6 ஆம் தேதி 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை ஒரே நாளில் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். மீதமுள்ள 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் கட்டும் பணிகள் தற்போது நிறைவடையும் தருவாயில் இருக்கின்றன.

அதற்கான பணியாட்களை நியமிக்கும் பணிகளும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட District Health Society மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் வாயிலாக இந்த மாத இறுதிக்குள் அந்த 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும் திறந்துவைக்கப்படவிருக்கின்றன.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்டத்தில்

நீர்மோர் - தண்ணீர்ப் பந்தல் திறப்பு!

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய் அறிக்கை!

சென்னை.ஏப்.3- மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதலின்படியும் கோடை வெப்பத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் கீழ்காணும் பகுதிகளில் காலை 7:30 மணியளவில் நீர்மோர்- தண்ணீர்ப்பந்தல் திறக்கப்பட உள்ளது.

கொளத்தூர் கிழக்கு

தலைமை: கே.பிரசாத் (பகுதி இளைஞரணி அமைப்பாளர்) - முன்னிலை: ICF வ.முரளிதரன் (பகுதி கழக செயலாளர்) : கே. சந்துரு (தலைமை செயற்குழு உறுப்பினர்):எஸ்.தனசேகர் (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்)

இடம்: திரு.வி.க.நகர் பேருந்து நிலையம், 11, SRP கோவில் தெரு. செம்பியம், பெரம்பூர், சென்னை - 600011

கொளத்தூர் மேற்கு

தலைமை: ந.திலீப் குமார் (பகுதி இளைஞரணி அமைப்பாளர்)

முன்னிலை: எ.நாகராசன் (பகுதி கழக செயலாளர்) :

சி.மகேஷ்குமார் (தலைமை செயற்குழு உறுப்பினர்)

இடம்: கொளத்தூர் லக்ஷ்மி அம்மன் கோவில், கொளத்தூர் மூகாம்பிகா ஜங்ஷன்.

துறைமுகம் கிழக்கு

தலைமை : பு.செந்தில்குமார் (பகுதி இளைஞரணி அமைப்பாளர்)

முன்னிலை: எஸ்.ராஜசேகர் (பகுதி கழக செயலாளர்)

இடம் : எண்.28. அம்மன் கோயில் தெரு. (ஏழுகிணறு மார்க்கெட் அருகில்) ஏழுகிணறு, சென்னை-600 001.

துறைமுகம் மேற்கு

தலைமை : நா. மோகன்- பகுதி இளைஞரணி அமைப்பாளர்

முன்னிலை: எஸ்.முரளி (பகுதி கழக செயலாளர்) : பா.ஜெகதீஷ் (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்)

இடம் : டேவிட்சன் தெரு. பிராட்வே. சென்னை-1

திரு.வி.க. நகர் வடக்கு

தலைமை : மணிகண்டன் - பகுதி இளைஞரணி அமைப்பாளர்

முன்னிலை: செ.தமிழ்வேந்தன் (பகுதி கழக செயலாளர்)

இடம் : பாரதி சாலை.பெரம்பூர். சென்னை-600011. (71வது வட்டம். பெரம்பூர் பேருந்து நிலையம் அருகில்)

திரு.வி.க. நகர் தெற்கு

தலைமை : ரீதர் ராஜன் - பகுதி இளைஞரணி அமைப்பாளர்

முன்னிலை: எம்.சாமிகண்ணு (பகுதி கழக செயலாளர்)

இடம் : திரு.வி.க நகர் தெற்கு பகுதி. பிரிக்ளின் சாலை. ஒட்டேரி. சென்னை - 600007

வில்லிவாக்கம் கிழக்கு

தலைமை : மா.ஜெகதீஸ்வரன் (பகுதி இளைஞரணி அமைப்பாளர்)

முன்னிலை: வே.வாசு (பகுதி கழக செயலாளர்)

இடம்: ஜாயிண்ட் ஆபீஸ் சந்திப்பு. எம்.டி.எச். சாலை. அயனாவரம். சென்னை-23

வில்லிவாக்கம் மேற்கு

தலைமை : வே.மகேந்திரன் (பகுதி இளைஞரணி அமைப்பாளர்)

முன்னிலை: கூ.பீ.ஜெயின் (பகுதி கழக செயலாளர்) :

ஜி.ஜே.பிரபு (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்)

இடம் : பாலியம்மன் கோவில் தெரு. வில்லிவாக்கம். சென்னை-49

எழும்பூர் வடக்கு

தலைமை : த. ஜெயக்குமார் (பகுதி இளைஞரணி அமைப்பாளர்)

முன்னிலை: சொ.வேலு (பகுதி கழக செயலாளர்) :

க.வினோத் (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்)

இடம் : டீமெல்லவோஸ் ரோடு. புளியந்தோப்பு. சென்னை-600012

எழும்பூர் தெற்கு

தலைமை : செ.பாலாஜி (பகுதி இளைஞரணி அமைப்பாளர்)

முன்னிலை: வி.சுதாகர் (பகுதி கழக செயலாளர்) :

ஆர்.டி.சங்கர்நானா (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்)

இடம் : சேத்துபட்டு டோபிகானா. 108-வது வட்டம். சேத்துப்பட்டு.

அம்பத்தூர் வடக்கு

தலைமை: இரவை பிரபு (பகுதி இளைஞரணி அமைப்பாளர்)

முன்னிலை: ஜோசப் சாமுவேல் MLA (பகுதி கழக செயலாளர்)

இடம்: ஷாப் தெரு. வெங்கடாபுரம். அம்பத்தூர் ஓ.டி.பேருந்து நிலையம் அருகில். அம்பத்தூர்.

அம்பத்தூர் தெற்கு

தலைமை : எம்.வசந்த் (பகுதி இளைஞரணி அமைப்பாளர்)

முன்னிலை: D.S.P.ராஜகோபால் (பகுதி கழக செயலாளர்) :

ஜெ.பாலமுருகன் (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்)

இடம் : பாடிக்குப்பம் மெயின் ரோடு. காமராஜர் நகர். அண்ணன் நகர் மேற்கு. சென்னை-600040

அம்பத்தூர் கிழக்கு

தலைமை : JPR ரகு (பகுதி இளைஞரணி அமைப்பாளர்)

முன்னிலை: MTR நாகராஜ் (பகுதி கழக செயலாளர்)

இடம் : கடப்பா ரோடு. கலெக்டர் நகர். மாதனாங்குப்பம். அம்பத்தூர்.

அனைத்து இடங்களிலும் அந்தந்த பகுதிகளுக்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள். இந்நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள். மண்டல குழு தலைவர்கள். நிலைக்குழு தலைவர்கள். மாமன்ற உறுப்பினர்கள். வட்ட கழக செயலாளர்கள். இளைஞரணி நிர்வாகிகள் என அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் நல்லூர் ஊராட்சி, சோலையம்மன் நகரில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல.ஏ. ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கே.வீரம்மாள்,சே.அரசு, நா.பரசுராமன், சரவணன், செல்வகுமார், இரத்தினமாலா, சிவகாமி, பாலாஜி, முருகேசன், பா.சேகர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சோலையம்மன் நகர் கிளை செயலாளர் கோ.செந்தில்குமார் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாவட்ட பிரதிநிதி ஜி.ராஜா, மீஞ்சூர் ஜி.முகுந்தன், ஜி.சசிகுமார், ஆகியோர் ஏற்பாட்டில் வட்ட செயலாளர்கள் எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆகியோர் வரவேற்பில் பகுதிச்செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் தலைமையில் ஜே.ஜே.எபினேசர் எம். எல்.ஏ, முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.உடன் மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், பி.ஸ்ரீனிவாசன், ஏ.டி.மணி, எஸ்.எம்.பரசுராமன், எம்.வாதில், இர.பொன்இளவரசன், எஸ்.எம்.அப்துல் ரகுமான், வி.கார்த்திக், ஆர்ரோன்ராஜ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.